வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# பெறுகை அறிவித்தல்

## கொரிய வேலை வாய்ப்பு தேடுவோர்களுக்காக நீண்ட கை டீ சர்ட்களின் வழங்கலுக்கான விலைமனுக்களின் அழைப்பு

### (விலைமனு) இல. – PR/02/08/03(Vo-ii)

கொரிய வேலை வாய்ப்பு தேடுவோர்களுக்காக 10,000 நீண்ட கை டீ சர்ட்களின் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் வழங்குநர்களிடம் இருந்து 2025.08.04 ஆம் திகதி ந.ப. 12.00 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் (SLBFE) திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**நீண்ட டீ சர்ட்கள் வழங்கப்படுவதற்கான விபரம்.**

01. விலைமனுவுடன் சேர்த்து ஒவ்வொரு டீ சர்ட்களின் மாதிரிகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பிரிவினதும் விபரக்குறிப்பு விலைமனு ஆவணங்களுடன் சேர்த்து வழங்கப்படும்.
02. டீ சர்ட்டின் வடிவமைப்பு, நிறம் மற்றும் துணி விலைமனு ஆவணங்களில் தரப்பட்ட விபரக்குறிப்புடன் பொருந்தி இருத்தல் வேண்டும்.
03. விலைமனுதாரர்கள் தற்போதைய நிலையில் SLBFE இனால் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
04. விலைமனுவுக்காக கூறுவிலை இடுவதற்கு ஆர்வம்காட்டும் உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் வழங்குநர்கள் இந்தத் துறையில் குறைந்தது மூன்று ஆண்டுகள் வர்த்தக அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அதனை நிருபிப்பதற்கு வர்த்தக பதிவுச் சான்றிதழின் (BRC) பிரதி ஒன்றை விலைமனு ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்திற்கு அரச அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனங்களுக்கு இதனையொத்த பண்புடைய குறைந்தது மூன்று (03) வெற்றிகரமான கொள்வனவு கோரல்களை மேற்கொண்டிருத்தல் வேண்டும். அதனை நிருபிப்பதற்கு சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து நூற்று இருபது (120) நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
07. 2025.07.14 ஆம் திகதி தொடக்கம் 2025.08.03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகை பிரிவில் இருந்து கேள்விமனு ஆவணங்களை பெறுவதற்கு 10,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி பத்தரமுல்லை, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக, பெறுகைப் பிரிவு, முகாமையாளரின் முகவரிக்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
08. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட "இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக, தலைவரின்" பெயரிலான முந்நூறு ஆயிரம் ரூபாவின் (ரூபா 300,000) பெறுமதிக்கு விலைமனு பிணைமுறி ஒன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு பிணையானது நூற்று பதினெட்டு (118) நாட்கள் வரை (விலைமனு திறக்கப்படும் நாள் உட்பட) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
09. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2025.07.08 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு பத்தரமுல்லை, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இல. 234, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2ஆவது மாடி, சிறிய மாநாட்டு அறையில் இடம்பெறும்.
10. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நீண்ட கை டீ சர்ட்களின் வழங்கல் PR/02/08-(3)" என்று குறிப்பிட்டு SLBFE தலைமையகத்தின் இரண்டாவது மாடியில் உள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் (01) இடுதல் வேண்டும் என்பதோடு அதே நேரத்தில் SLBFE இன் பெறுகைப் பிரிவுக்கு மாதிரிகளை கையளித்தல் வேண்டும்.
11. விலைமனுக்களை ஏற்பது 2025.08.04 ஆம் திகதி பி.ப. 12.00 இற்கு நிறைவடைவதோடு விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் அவை திறக்கப்படும். கேள்விமனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
12. எந்த காரணத்தையும் குறிப்பிடாது அனைத்து அல்லது எந்த ஒரு விலைமனுவையும் நிராகரிப்பது அல்லது விலைமனு ஒன்றின் ஒரு பகுதியை மாத்திரம் ஏற்கும் உரிமை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுள்ளார். மேலதிக விபரங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முகாமையாளர் (பெறுகை) இடமிருந்து பெறலாம்.

**தொலைபேசி இல. 0112887585**
**மின்னஞ்சல்: mgr_ procurement @ slbfe.lk**

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்லை.**

**"அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்"**